4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 212/2017 நாள்: 02.02.2026 பி.வா.சா.4 – நாகராஜன்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். பேப்பர் மில் மற்றும் கார்பெண்டர் தொழிலையும் செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழிலில் காலியிடம் வாங்கி அதில் வீடு கட்டி விற்பனை செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் மேற்படி ரியல் எஸ்டேட் தொழிலுக்கு வெளி நபர்களிடம் கடன் வாங்கியும், வங்கியில் கடன் வாங்கியும் தொழிலை செய்துவிட்டு பின்பு கடனை அடைப்பேன் என்றால் சரிதான். நான் வீட்டை கட்டும் போது யாராவது விலைக்கு கேட்டால் நான் விலைக்கு கொடுத்து பின்பு நான் கட்டி முடிப்பேன் என்றால் சரியல்ல. ரியல் எஸ்டேட் தொழிலை நானும், எனது மனைவியும் சேர்ந்து தான் செய்து வருகிறோம் என்றால் சரிதான். நான் எனது மனைவி பெயருக்கு தான் ரியல் எஸ்டேட் சம்பந்தமான சொத்துக்களை வாங்குவேன் என்றால் சரிதான். மேற்படி ரியல் எஸ்டேட் தொழிலுக்காக நான் எத்தனை முறை கடன் வாங்கியுள்ளேன் என்றால் வங்கியில் ஒரு முறையும், சோழ மண்டலம் பைனான்சில் ஒரு முறையும், செல்வராஜ் என்பவரிடம் 2 முதல் 3 முறை இடத்தை அடமானம் பதிவு செய்து கொடுத்து கடன் வாங்கியுள்ளேன். நான் மேற்படி நபரிடம் கிரைய ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை, அடமான பத்திரம் தான் எழுதினேன். தாவா சொத்து 7 செண்ட் விஸ்தீரணம் கொண்டது. தாவா சொத்து எனது மனைவி பெயருக்கு சுமார் 2011 ல் கிரையம் வாங்கினேன். தாவா சொத்தின் மனை எண் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக நான் கார்பரேசன் வங்கியிலும், சோழமண்டலம் பைனான்சிலும் கடன் வாங்கியுள்ளேன். எனக்கு தெரியாமல் எனது மனைவி கடனும்

வாங்கமாட்டார், சொத்துக்களை விற்பனை செய்யவும் மாட்டார். இந்த வழக்கில் எனது மனைவி தரப்பில் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, எனது மனைவியை விசாரணை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் எனது மனைவி எழுதிக்கொடுத்தவை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் செல்வராஜ் மற்றும் லாவண்யா ஆகியோர்களுக்கு எனது மனைவி கிரைய ஒப்பந்தமாக எழுதிக்கொடுத்தவை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை தான் நான் அடமான பத்திரம் என்று கூறுகிறேன் என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களை எனது மனைவி ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள கிரைய ஒப்பந்தத்தை நான் பார்த்துள்ளேன். மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் ரூ.35 லட்சத்திற்கு கிரையம் பேசி ரூ.12 லட்சம் அட்வான்ஸ் தொகையை எனது மனைவிக்கு வாதி கொடுத்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்த ஏற்படுத்தப்பட்ட தேதியில் தாவா சொத்து கார்பரேசன் வங்கியில் அடமானமாக இருந்தது என்றால் சரிதான். மேற்படி அடமானத்தை எப்போது நீக்கினேன் என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். சோழமண்டலம் பைனான்சில் எப்போது தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்றேன் என்றால் ஞாபகம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்தை எனது மனைவி அடமானத்தை தீர்த்து எனது மனைவியின் தம்பி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிகொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எனது மனைவி எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் தற்போது வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் வீடு கட்டிய பிறகு தான் சோழமண்டலம் பைனான்சில் நான் அடமானம் வைத்தேன் என்றால் சாட்சி வீட்டு வேலை சற்று முடியாமல் இருந்த சமயத்தில் அடமானம் வைத்தேன் என்று கூறுகிறார். தாவா சொத்தில் வீடு கட்டுவதற்காக தான் கார்பரேசன் வங்கியில் அடமானம்

வைத்தேன் என்றால் சரிதான். சோழமண்டலம் பைனான்சில் கடன் வாங்கி தான் வீட்டு வேலையை முடித்தேன் என்றால் சரிதான். வாதி, செல்வராஜ், முருகன் ஆகியோர்கள் மீது நான் குற்றப்புகார் கொடுத்துள்ளேன். சிவில் வழக்கு நிலுவையில் இருந்ததால் போலிசார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று தான் எனது மனைவி தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் எனது மனைவியின் கையொப்பம் அல்ல என்பதை நிரூபிக்க கையெழுத்து பரிசோதனை எடுக்க நான் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரிான். எனது மனைவி மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் உள்ள பத்திர எழுத்தரின் கையொப்பத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி மனு தள்ளுபடியான பிறகு நாங்கள் மேல் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். எனது மனைவி மீது செல்வராஜ், லாவண்யா ஆகிய இருவரும் எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்களுக்கும் செல்வராஜிக்கும் இடையே வரவு செலவு கணக்கு எதுவும் நிலுவையில் இல்லை. எனது மனைவி செல்வராஜ் மற்றும் லாவண்யா ஆகியோருக்கு எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்தத்தை அவர்கள் ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். வாதி மற்றும் செல்வராஜிக்கும் இடையே நடந்த வரவு செலவிற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நானும் எனது மனைவியும் சேர்ந்து தான் வாதியோடு தாவா சொத்து சம்பந்தமாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டோம் என்றும், தற்போது அதை மறுத்து பொய் சொல்கிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொண்டு ரூ.12 லட்சத்தை அட்வான்சாக பெற்றுக்கொண்டு காலதாமதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக அடமானத்தை நீக்காமல் காலதாமதப்படுத்திய காரணத்தினால் வாதி முன்தொகையை வட்டியுடன் திரும்ப கேட்டு வழக்கு

தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியை ஏமாற்றும் நோக்கத்தோடு எனது மனைவி அவர் தம்பி பெயருக்கு பொய்யாக செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.02 16:37:38 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.